# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2447 - 2025 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2025.07.25**

2447 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 670 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 674 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**அக்குறணை பிரதேச சபை**

## மாட்டிறைச்சி/ ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதற்கென ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இங்கு அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களால் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தனிப்பட்ட மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கப்பட்டுள்ளதென 2025 ஆம் மாதம் 20 ஆம் திகதி கொண்ட 1477 இலக்கத் தீர்மானத்தின் கீழ் கட்டணம் விதிக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

கீழே உள்ள அட்டவணையில் பெயர் குறிப்பிட்டுள்ளவர்களால் அக்குறணை பிரதேச சபை நிருவாகப் பிரிவுக்குள் அவர்களது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாட்டிறைச்சி/ ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவென விண்ணப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதை எதிர்க்கும் அக்குறணை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் உரிய காரணங்களைக் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 (பதினான்கு) நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அறிவித்தல் விடுக்கின்றேன்.

டி. ஜீ. எம். பி. ரணசிங்ஹ,
செயலாளர்,
அக்குறணை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குறணை.
2025 யூன் 06.

**அட்டவணை**

| *தொ. இல.* | *விண்ணப்பதாரியின் பெயர்* | *மாட்டிறைச்சி வர்த்தகம் நடாத்த உத்தேசித்துள்ள இடம்* | *வர்த்தகத்தின் தன்மை* |
|---|---|---|---|
| 01 | திரு. பி. எம். முஸம்மில் | இல. 562, நீரெல்ல, அக்குறணை | மாட்டிறைச்சி |

07- 781

---

**குருநாகல் பிரதேச சபை**

## பொது பாதையாக அறிவிக்கப்பட்ட ஒரு பாதையின் அகலத்தை திருத்துவதற்கான அறிவிப்பு

2022.11.15 அன்று வெளியான 2306/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானி பகுதி IV (அ) வில் அறிவிக்கப்பட்ட, குருநாகல் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகள் இணைப்பட்டிகையில் 825 என்பதன்படி குறிப்பிடப்பட்டுள்ள பாதையின் அகலம்,

எங்கள் சபையின் 2025.07.03 அன்று நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மான இல. 09 இன் கீழ் பின்வருமாறு திருத்தப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

எல். பி. ஜகத் குணதிலக,
தலைவர்,
குருநாகல் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குருநாகல்,
2025, யூலை 09.

**அட்டவணை**

| *பாதை உப இலக்கம்* | *பாதை இலக்கம்* | *பாதையின் பெயர்* | *திருத்தப்பட்ட அகலம் (மீற்றர்)* |
|---|---|---|---|
| 825 | NWP KNP C270 37 | மகலந்த வத்தா வீதி | 6.1 |

07- 782

---

**நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா காலங்களில் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான அறிவித்தல்.**

1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் பிரிவு 56 இற்கமைவாகவும் யாழ்ப்பாணம் மாநகர சபையால் வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2024 ஆம் இலக்க 2017.06.16 ஆம் திகதிய மற்றும் 2421 ஆம் இலக்க 2025.01.24 ஆம் திகதிய நியமத்துணைவிதிகளுக்கு அமைவாகவும் 2025.06.23 ஆம் திகதிய JMC/2025/06/09 ஆம் இலக்க மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டத் தீர்மானத்தின் பிரகாரமும் இவ்வர்த்தமானி வெளியிடப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

(திருமதி) வி.மதிவதனி,
முதல்வர்,
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

**நடவடிக்கைகள்**

1. நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவானது ஒவ்வொரு வருடமும் ஆடி அமாவாசை தினத்திலிருந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தேழு தினங்கள் நடைபெறும்.

2. வருடாந்த பெருந்திருவிழா ஆரம்பமாவதற்கு ஒருமாதகாலத்திற்கு முன்னர் இரண்டு தடவைகள் திருவிழா ஒழுங்கமைப்பு ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் ஒழுங்கமைக்கப்படும். முதலாவது கலந்துரையாடலுக்கு பின்னர் வீதித்தடை பகுதிக்குள் வரும் நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் வியாபாரிகள் தனியான கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டு அவர்களது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு யாழ் மாநகரசபையினால் பெருந்திருவிழா புறஏற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

3. வருடாந்த பெருந்திருவிழா ஆரம்பமாகும் கொடியேற்றத்திற்கு முதல் நாள் வைரவர் சாந்தி உற்சவத்தன்று அதிகாலை முதல் வைரவர் சாந்தி உற்சவத்துடன் நிறைவடையும் இருபத்தேழாம் திருவிழா நள்ளிரவு வரை ஆலயச் சுற்றுப் புறத்திலுள்ள வீதித்தடைகள் முழுமையாக அமுலில் இருக்கும்.

4 ஆலயச்சூழலில் வீதித்தடைகள் அமைக்கப்படும் இடங்கள் யாழ் மாநகரசபையினால் தீரமானிக்கப்படும். இவ்வீதித்தடைகள் ஆலய நிர்வாகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதித்தடைப் பகுதிக்குள் வதியும் நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் நிரந்தர வியாபாரிகள் ஆகியோரின் ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டு நிபுணத்துவக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப யாழ் மாநகரசபையினால் தீர்மானிக்கப்படும்.

5. ஆலயச்சுற்று வீதிகள் மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறைவீதி ஊடாக வரும் வாகனங்கள் மாற்றுப் பாதை ஊடாக யாழ் மாநகரசபைக்கு முன்பாக உள்ள நல்லூர் குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஆனைப்பந்திச் சந்தி ஊடாக யாழ் நகரை அடையும். அதே போல யாழ் நகரில் இருந்து வரும் வாகனங்கள் மேற்படி பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடையும். எனினும் சப்பறம், இரதோற்சவம், தீர்த்தம் போன்ற விசேட திருவிழாக்களின் போது பருத்தித்துறை வீதியால் வரும் வாகனங்கள் முத்திரைச்சந்தி ஊடாகத் திரும்பி கச்சேரி நல்லூர் வீதியிலேயே பயணிக்க அனுமதிக்கப்படும். யாழ் நகரில் இருந்து வரும் வாகனங்கள் அதே பாதையில் பயணிக்க அனுமதிக்கப்படும்.

6. ஆலயச் சூழலில் வீதித்தடைப் பகுதிக்குள் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர் மற்றும் நிரந்தர வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு, அவர்களின் நாளாந்த சுகாதார, அவசர, அத்தியாவசிய தேவைகளுக்கு பாதிப்பில்லாத வகையில் அவர்களுக்குரிய வாகனங்களிற்கான அனுமதி அட்டையில் உரிய வீதிகள் குறிப்பிடப்பட்டு தேவையான உறுதிப்படுத்தல்களுடன் மாநகரசபையால் அனுமதி அட்டை வழங்கப்படும். இவ் அனுமதி அட்டைகள் ஒவ்வொரு வீதிகளுக்கும் தனித்தனி நிறம் கொண்டதாக அமையும்.

7. ஆலய வெளி வீதியில் ஆலய நிர்வாகத்தினரால் உற்சவ காலத்தில் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லை இடப்பட்ட புனிதப் பகுதிக்கு உள்ளக வீதித்தடை பகுதிக்குள் மாநகர சபை வாகனங்கள், விசேட அனுமதி பெற்ற தேவஸ்தான, நிரந்தர குடியிருப்பாளர்கள், மற்றும் நிரந்தர வியாபாரிகளின் வாகனங்கள் மட்டுமே உட்செல்ல முடியும்.

8. அனைத்து முதலாம் இரண்டாம் வீதித்தடைகளிற்குள் வீதி ஓரமாக எந்தவொரு வாகனங்களும் தரித்து நிற்க அனுமதி வழங்கப்படமாட்டாது. சுவாமி வெளி வீதி வரும் வேளை எந்தவொரு வாகனங்களும் வீதித் தடைகளின் ஊடாக உள்வர அனுமதி வழங்கப்படமாட்டாது.

9. ஆலய வெளிவீதியில் சிவப்பு, வெள்னை வர்ண கொடிகளால் எல்லை இடப்பட்ட புனிதப் பகுதிக்கு வெளியாக மற்றும் வெளிப்புற வீதித்தடைகளுக்கு உட்புறமாக உள்ள உற்சவ காலங்களில் அமைக்கப்படும் வியாபார நிலையங்களிற்கு பொருட்களை ஏற்றி இறக்க பகல் 1.00- 2.30 மணி வரையும், இரவு 10.00 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 2.00 மணி வரைக்கும் பின்னரும் உரிய வாகனங்கள் அனுமதிக்கப்படும். இச்சந்தர்ப்பங்களில் தற்காலிக வியாபார நடவடிக்கையினை உறுதிப்படுத்தி மாநகர சபையால் வழங்கப்படும் பற்றுச்சீட்டினை வாகன அனுமதி அட்டையாக பயன்படுத்த முடியும்.

10. ஆலயத்திற்கு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக வருகின்ற உழவு இயந்திர மற்றும் வாகனத்தில் வரும் தூக்குக் காவடிகள் ஆலயத்தின் முன்பாக பருத்தித்துறைவீதி வழியினூடாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் பருத்தித்துறைவீதி ஸ்ரீ முருகன் தண்ணீர் பந்தலுக்கு முன் இறக்கப்பட்டதும் தூக்குக்காவடி வாகனங்கள் அனைத்தும் செட்டித்தெருவீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

11. ஆலயத்தின் உட்புற, வெளிப்புற பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுவதுடன், வீதித்தடைகளில் மாநகர சபை ஊழியர்களுடன் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுவர். ஆலய வெளிப்புரச் சூழலில் யாழ் மாநகரசபையால் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

12. ஆலய சூழலில் சுகாதாரம், குடிநீர் விநியோகம், வீதிகளுக்கு நீர் விசிறுதல், திண்ம, நிரவக் கழிவகற்றல், மின்சார விளக்குகள் பழுதுபார்த்தல், ஆலய வெளிவீதிக்கான மண் கொள்வனவு செய்து பரவுதல், ஆலயச் சூழலில் உள்ள பந்தல்களுக்கு கட்டண அடிப்படையில் மண் வழங்கல் வீதித்தடை பராமரிப்பு சம்பந்தமான ஒட்டு மொத்த நிர்வாக ஒருங்கிணைப்பு கண்காணிப்பு என்பன யாழ் மாநகரசபையால் மேற்கொள்ளப்படும்.

13. ஆலய சுற்றாடலில் உள்ள அன்னதானம் வழங்கும் இடங்கள், தாகசாந்தி நிலையங்கள் மற்றும் உணவுகையாளும் இடங்கள் சுகாதார நியமங்களுக்கு ஏற்ப பராமரிக்கப்பட வேண்டும். இவை சுகாதார வைத்திய அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் கண்காணிக்கப்படும்.

14. மாநகரசபையால் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அழைக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் திருவிழாக்காலங்களில் மாநகரசபையுடன் இணைந்து கடமையில் ஈடுபடும் தொண்டர் அமைப்புக்கள் ஆகியவற்றிற்கான உபசரணைகள் மாநகரசபையால் ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கப்படும்.

15. ஆலய சூழலில் அமைக்கப்படும் வாகன தரிப்பிடங்களுக்கான அனுமதியினை மாநகரசபையில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். வாகனதரிப்பிட கட்டணங்கள் தொடர்பாக மாநகரசபையால் தீர்மானிக்கப்படும் கட்டணமே அறவிடப்பட முடியும்.

16. ஆலய சூழலின் தற்காலிக கடைகள் அமைப்பதற்குரிய வரைபடம் நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு அமைவாக யாழ் மாநகரசபையால் தயாரிக்கப்பட்டு அந்தக் கடைகள் கேள்விகோரல் நடைமுறை மூலம் வழங்கப்படும்.

17. உற்சவ காலத்தில் ஆலய சூழலில் பின்வரும் விடயங்கள் தடை செய்யப்பட்டுள்ளது.

- உற்சவ காலத்தில் சிவப்பு, வெள்ளை வர்ண கொடிகளால் எல்லை இடப்பட்ட புனித பிரதேச உள்ளக வீதித்தடைப் பகுதிகளினுள் எந்தவிதமான தற்காலிக வியாபார, விளம்பர, ஒளிபரப்பு மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உற்சவ காலத்தில் ஆலய வெளிவீதிகளில் காலணிகளுடன் பிரவேசித்தல்.
- உற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ஆன்மீகம் சாராத எந்தவொரு ஒலி,ஒளி நிகழ்வுகளையும் நடாத்துதுல் மற்றும் காட்சிப்படுத்தல், விளம்பரம் செய்தல்.
- உற்சவ காலத்தில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார மற்றும் யாசக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ட்ரோன் (Drone) கமரா பறக்க விட்டு காணொளி பதிவுசெய்தல், வானூர்தியைப் பயன்படுத்தி பூ சொரிதல் மற்றும் வாணவேடிக்கை நிகழ்வுகளை செய்தல்,
- உற்சவ காலத்தில் பொலித்தீன் பாவனை (மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வர்த்தமானிக்கமைவானது 2034/33, 34, 35, 36, 37, 38-2017.09.01, 2211/51-2021.01.21, 2341/30-2023.07.19, 2353/55-2023.10.12)
- ஆலயச் சூழலில் உற்சவ காலத்தில் பிரசுரிக்கப்படும் துண்டுப்பிரசுரங்களில் தெய்வ திருவுருவங்களை பிரசுரித்தல்.

18. வருடா வருடம் முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு சூழ்நிலைகளுக்கு ஏற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார காரணங்கள் தொடர்பில் யாழ் மாநகரசபையின் ஏற்பாடுகளில் சிறு மாற்றங்கள் மேற்கொள்ள முடியும்.

யாழ்ப்பானம் மாநகர சபையினால் 2350 ஆம் இலக்க 2023.09.15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பகுதி IV(ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா காலங்களில் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான பிரசுரமானது இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

வி.மதிவதனி,
முதல்வர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2025, யூலை 17.

07-835

# நானாவித அறிவித்தல்கள்

**கம்பஹா மாநகர சபை**

களியாட்ட வரி - 2025

கம்பஹா மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரி அறவிடுதலின் 2024.12.27 ஆந் திகதிய மற்றும் 2417 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பக்கம் 6163 இல் வெளியிடப்பட்ட, களியாட்ட வரி சதவீத சம்பந்தமான அறிவித்தல் கம்பஹா மாநகர சபையின் நகர பிதாவான என்னால் 2025.07.09 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் 25 ஆம் இலக்க பொதுச் சபை தீர்மானத்தின் கீழ் திருத்தப்பட்டது என பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கிறேன்.

எரிக் லக்ஸ்மன் எதிரிவிக்ரம,
நகர பிதா,
கம்பஹா மாநகர சபை.

கம்பஹா மாநகர சபை அலுவலகம்,
கம்பஹா.
2025 யூலை 09.

**தீர்மானம்**

கம்பஹா மாநகர சபை அதிகார எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் சகல துணை சினிமாப்படமொன்று, மெஜிக் கண்காட்சியொன்று, சர்க்கஸ் கண்காட்சியொன்று, சங்கீத கச்சேரியொன்று, பொருட்காட்சி விளையாட்டுப் போட்டியொன்று/ நிகழ்வு/ கண்காட்சி, எந்தவிதமான திருவிழாவொன்றும், களியாட்ட விளையாட்டு நிகழ்வு / கண்காட்சியொன்று ஆகியவற்றுக்காக அச்சிடப்படுகின்ற அனுமதிச் சீட்டுக்களின் பெறுமதியில் 12 % வரியொன்று செலுத்தப்படல் வேண்டும்.

07-838/1

---

**கம்பஹா மாநகர சபை**

கம்பஹா மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரி அறவிடுதலின் 2024.12.27 ஆந் திகதிய மற்றும் 2417 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பக்கம் 6183 இல் வெளியிடப்பட்ட, வீதி பழுதாக்கலுக்காக அறவிடப்படுகின்ற விலைமனு சம்பந்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு கம்பஹா மாநகர சபையின் நகர பிதா என்னால் 2025. 07.09 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் 30 ஆம் இலக்க பொதுச் சபை தீர்மானத்தின் கீழ் திருத்தப்பட்டது என பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கிறேன்.

எரிக் லக்ஸ்மன் எதிரிவிக்ரம,
நகர பிதா,
கம்பஹா மாநகர சபை.

கம்பஹா மாநகர சபை அலுவலகம்,
கம்பஹா.
2025 யூலை 09.

| *தொ. இல.* | *விபரம்* | *திருத்தப்படவேண்டிய தொகை* |
|---|---|---|
| 01 | வீதி பழுதடையச் செய்தல் தார் (1m$^2$) | 35,000.00 |
| 02 | வீதி பழுதடையச் செய்தல் கொங்கிரீட் (1m$^2$) | 35,000.00 |
| 03 | வீதி பழுதடையச் செய்தல் காப்பட் (1m$^2$) | 35,000.00 |
| 04 | வீதி பழுதடையச் செய்தல் இண்டர்லொக் (1m$^2$) | 5,000.00 |
| 05 | வீதி ரேகை விண்ணப்பப் படிவமொன்றுக்காக | 100.00 |
| 06 | அனுமதி வழங்கப்பட்ட திட்ட வரைபடத்தின் உண்மைப் பிரதியொன்றினை பெறுவதற்கு | 500.00 |
| 07 | தகவல் சட்டத்தினால் கேட்கப்படும் பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ள<br>(A4 அளவின் பக்கம்)<br>(A4 அளவின் இரு பக்கங்களுக்கு) | <br>2.00<br>3.00 |
| 08 | ஒழுக்காற்று நடவடிக்கைக்கான பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ள<br>(A4 அளவின் தனிப் பக்கம்)<br>(A4 அளவின் இரு பக்கங்களுக்கு) | <br>4.00<br>5.00 |

07-838/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.